உ
ஓம் நமச்சிவாய

# அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், கோவை மாவட்டம்

## மறுபொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு பசலி 1432–க்கு

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அனுபோக சுவாதீனத்திலிருந்து வரும் இதன் கீழ்க்காணும் வருடாந்திர மற்றும் மாதாந்திர உரிம இனங்களுக்கு தனித்தனியே பசலி 1432–க்கு 12.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு மட்டும் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு 16.06.2022 பிற்பகல் 3.30 மணிக்கு இத்திருக்கோயில் உதவி ஆணையர்/செயல்அலுவலர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை இலாகா அலுவலர்கள் முன்னிலையில் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி விடப்படும். விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையை வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலை மூலம் செலுத்தி ஏலம் கோரலாம். ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்கலாம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி தேதி | : | 16.06.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் |
| 2. | பொதுஏலம் நடைபெறும் நாள் / நேரம் | : | 16.06.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு |
| 3. | ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் நாள்/நேரம் | : | 16.06.2022 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு |
| 4. | ஒப்பந்தப்புள்ளி திறப்பு பொதுஏலம் நடைபெறும் இடம் | : | திருக்கோயில் கல்யாண மண்டபம் |

### <u>வருடாந்திர உரிம இனங்கள்</u>

| வ. எண் | இனங்கள் | வரைவோலையாக முன்வைப்புத் தொகை ரூ.பை | வரைவோலையாக மின்கட்டண முன்வைப்புத் தொகை ரூ. பை | ஒப்பந்தப் படிவம் தொகை ரூ.பை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஆற்று மேடை விநாயகர் மற்றும் நாகர் கோயில் பூஜை செய்து கொள்ளும் உரிமம். வருடக்குத்தகை | 5,00,000/– | 5,000/– | 100.00 |
| 2. | உபகோயிலான அருள்மிகு பட்டிவிநாயகர் திருக்கோயிலில் விடலைத் தேங்காய்கள் சேகரித்துக் கொள்ளும் உரிமம். வருடக்குத்தகை | 10,000/– | ---- | 50.00 |
| 3. | திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருக்கோயில் உள்வளாகங்களில் உள்ள தென்னை மரங்களில் தேங்காய் பறித்துக் கொள்ளும் உரிமம் வருடக்குத்தகை | 2,000/– | --- | 50.00 |
| 4. | **<u>காலியிடம்</u>** திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆற்றுவிநாயகர் நாகர் கோயில் பூஜை பாத்தியதை இடத்தில் உள்ள தற்காலிக கடை அமைத்து பூஜை சாமான்கள் வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் வருடக்குத்தகை | 50,000/– | 5,000/– | 50.00 |
| 5 | இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்காணும் நன்செய் நிலத்தில் ஓராண்டிற்கு மட்டும் விவசாய சாகுபடி செய்து கொள்ளும் உரிமம் வருடக்குத்தகை சர்வே எண். 37/3–ல் 0.08.0 ஹெக், 39/2–ல் 0.17.0 ஹெக், 39/3–ல் 0.19.0 ஹெக், 39/4–ல் 0.17.0 ஹெக், 39/5–ல் 0.18.0 ஹெக், 39/6–ல் 0.17.0 ஹெக், 39/7–ல் 0.17.0 ஹெக்டேர் ஆக கூடுதல் 1.13.0 ஹெக்டேர் நிலங்கள் வருடக்குத்தகை | 25,000/– | ---- | 50.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | <u>**மாத வாடகை இனம்**</u> | | | |
| 6 | திருக்கோயிலுக்கு வெளியே ஒதுக்கித்தரும் இடத்தில் தற்காலிக தகர செட் அமைத்து ஸ்படிகமாலை, துளசிமாலை, சுவாமி திருவுருவப்படங்கள் வகையறா விற்பனை செய்து கொள்ளும் உரிமம். | 1,00,000/– | 10,000/– | 50.00 |

## <u>அனைத்து இனங்களுக்கும் பொதுவான நிபந்தனைகள்</u>

1. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பில் இந்து சமயத்தினர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

2. இத்திருக்கோயிலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர்களும், திருக்கோயிலினால் வழக்கு தொடுக்கப்பட்டவர்களும், நிலுவைத் தொகை செலுத்த வேண்டியவர்களும், கோயிலின் நன்மைக்கு முரணாக செயல்பட்டவர்களும், வேறு திருக்கோயில்களில் நிலுவைத் தொகை செலுத்த வேண்டியவர்களும் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த விசயத்தில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.

3. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிவுற்றதும் உயர்ந்த கேள்விதாரர் தமது சொந்த செலவில் ரூ. 20/– முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.

4. ஏல முன்வைப்புத் தொகை மற்றும் மின் கட்டண தொகை செலுத்துவோருக்கு மட்டுமே ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதி சீட்டு வழங்கப்படும். இந்த அனுமதி சீட்டு வைத்திருப்பவர்கள் மட்டுமே ஏல அரங்கினுள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். இந்த அனுமதி சீட்டு வைத்திருப்பவர்கள் மட்டுமே கேள்வி கேட்கலாம். மற்றவர்கள் ஏல அரங்கினுள் நுழையவோ ஏலக்கேள்வி கேட்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உரிமம் உறுதி பெற்றவர் கட்டிய ஏலம் முன்வைப்புத் தொகையுடன் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்ட குத்தகைத் தொகையை உடனே செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனையோரின் வைப்புத் தொகை வரைவோலை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிந்தவுடன் திருப்பித் தரப்படும்.

6. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பு காரணம் கூறாமல் எந்த கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது ஏலத்தை ஒத்தி வைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

7. மேற்படி உரிமங்களின் காலம் 12.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலம் கொண்ட பசலி 1432–க்கு மட்டும். ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் உரிமம் தொகை இவ்வளவு என்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் மற்றும் ஏலம் கோருபவர்கள் முன்வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக அல்லது கேட்பு வரைவோலையாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. பொதுஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் அந்தந்த இனங்களின் நேரே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகை மற்றும் மின் கட்டண வைப்புத் தொகை உட்பட வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலை "உதவி ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், கோவை – 10". ("Assistant Commissioner / Executive Officer, Arulmigu Patteeswaraswamy Thirukovil, Perur, Coimbatore - 10") என்ற முகவரிக்கு கோவையில் மாற்றத்தக்க வகையில் பொதுகூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட அரசு வங்கிகளின் வரைவோலையாக செலுத்த வேண்டும். வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி படிவம் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அலுவலக நாட்களில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

10. ஒப்பந்தப்படிவம் 02.06.2022 முதல் 16.06.2022 அன்று பிற்பகல் 2.00 மணி வரை மட்டுமே வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் தொகை முழுமையாக குறிப்பிட்டும், எல்லா காலங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

11. ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1000/– க்கும் குறையாமல் ஏலக்கேள்வி கேட்க வேண்டும்.

12. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிமம் உயர்ந்த கேள்விதாரருக்கு மட்டுமே உறுதி செய்யப்படும். ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். ஆணையர் அவர்கள் உத்தரவு பெற்றபின்பே ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிமம் உறுதி செய்யப்படும்.

13. தொடர்புடைய உரிமதாரர் கோயில் நிர்வாகத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் தொடர்புடைய உரிமத்தை வைத்து நடத்தி வர வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவிற்கு தான் பந்தல் அல்லது கொட்டகையை தமது சொந்த செலவில் அமைத்துக் கொள்ள வேண்டும். உரிம காலம் முடிந்தவுடன் பந்தல் அல்லது கொட்டகையை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும். தவறினால் திருக்கோயில் மூலம் அப்புறப்படுத்தப்படும். இதற்கு ஏற்படும் செலவுகளுக்கு நஷ்ட ஈடு பெறப்படும்.

14. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்ட நபர் தலத்திலேயே ஏல முன்வைப்புத் தொகை நீங்கலாக ஏல உரிமத் தொகை முழுவதையும் செலுத்திவிட வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு மறுபடி ஏலம் நடத்தப்படும். வைப்புத் தொகை பறிமுதல் செய்து, மேற்படி இனம் மறு ஏலத்தில் விடப்படும். அவ்வாறு மறு ஏலத்தில் விடப்படும் போது குறைவான தொகைக்கு ஏலம் போனால் ஏற்படுகின்ற குறைவுத் தொகையினை முன் ஏலதாரரிடமிருந்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

15. உரிமம் எடுத்தவர் தொடர்புடைய இனத்தை உள் குத்தகைக்கு விடக்கூடாது. உள்குத்தகைக்கு விட்டிருப்பதாகத் தெரியும் பட்சத்தில் உரிமம் ரத்து செய்யப்படும்.

16. உரிமங்கள் தொடர்பாக உரிமம் எடுத்தவர்கள் பற்றி வரும் புகார்களை விசாரித்து தக்க உத்தரவு பிறப்பிக்க நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.

17. மேற்கண்ட இனங்கள் உறுதி செய்யப்பட்ட உரிமைதாரர்கள் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் வரி ஏதும் இருப்பின் அதை உரிமதாரர் தம் பொறுப்பில் திருக்கோயில் பெயரில் மட்டுமே செலுத்திக் கொள்ள வேண்டும்.

18. மேற்கண்ட நிபந்தனைக்கு முரணாக உரிமம் பெற்றவர்கள் நடந்து கொள்ளும் பட்சத்தில் குறிப்பாக மேலே 15–ல் கண்ட நிபந்தனையின்படி கோயிலுக்குத் தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் முன் அறிவிப்பு ஏதுமின்றி தொடர்புடைய உரிமம் ரத்து செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்பட்ட இனம் மறு ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும் என்பதையும் அல்லது மறு பொதுஏலத்தில் விடப்பட்டால் அல்லது கோயில் நேரடி நிர்வாகத்தினரால் எடுக்கப்பட்டால் கோயிலுக்கு எவ்வகையிலாவது இழப்பு ஏற்படுமாயின் முன் உரிமதாரரே அதற்கு முழுப் பொறுப்பு ஏற்று ஈடு செய்து தர வேண்டும் என்பதையும், ஆதாயம் ஏற்படின் முன் உரிமதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதையும் கண்டிப்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. திருக்கோயிலால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக சேவார்த்திகளிடம் ஏலதாரர் வசூலித்தால் இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டால் கஷ்ட நஷ்டங்கள் அனைத்தும் உரிமைதாரர்களை சேர்ந்ததாகும். திருக்கோயில் இது தொடர்பாக வழக்குகளுக்கு எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

20. பினாமி பெயரில் உரிமத்தை ஏலத்தில்/ஒப்பந்தப்புள்ளியில் எடுக்கக்கூடாது. அவ்வாறு எடுத்ததாக நிர்வாகத்திற்கு தெரியவந்தால் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி உரிமம் ரத்து செய்யப்பட்டு செலுத்திய தொகை மற்றும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும். அதனால் ஏற்படும் இழப்பிற்கு அவரே பொறுப்பாவார்.

21. திருக்கோயிலில் பணிபுரியும் ஊழியர்கள்/பணியாளர்களோ அல்லது அவர்களின் உறவினர்களோ ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

22. ஏலதாரர்/ஒப்பந்ததாரர் உரிமதாரர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கும் இடம் மற்றும் பொருட்களுக்கு தீவிபத்து மற்றும் இயற்கை ஆபத்து முதலியவற்றுக்கு இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும். விபத்து ஏதேனும் ஏற்பட்டால் திருக்கோயிலிலிருந்து நஷ்ட ஈடு ஏதும் வழங்கப்படமாட்டாது.

23. மேற்படி உரிம காலம் முடிந்தபின் தொடர்ச்சியும் வேறு பாத்தியதையும் கிடையாது. 30.06.2023–ம் தேதியுடன் உரிம காலம் தானாகவே ரத்தாகிவிடும். 01.07.2023–ம் தேதி முதல் மேற்படி உரிமம் திருக்கோயிலுக்கு எடுத்துக் கொள்ள சட்டப்பூர்வ உரிமையுண்டு.

24. மேற்படி உரிம காலம் முடிந்தபின் உரிமதாரர் தனது உடமைகளை அப்புறப்படுத்திக் கொள்ள காலதாமதம் செய்தால் திருத்தப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78–ன்கீழ் ஆக்கிரமிப்பாக கருதப்பட்டு கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.

25. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விற்பனை உரிமத்தில் கலந்து கொண்டு ஏல முன்வைப்புத் தொகை கட்டுபவர்கள் இதில் காணும் நிபந்தனைகளை முழுவதும் படித்துப்பார்த்து அல்லது படிக்கக் கேட்டு புரிந்து கொண்டு முழுவதும் ஒப்புக் கொண்டு சம்மதித்து ஏலம் கோருவதாக கருதப்படும்.

26. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகைக்கு மேல் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் கேள்வி கேட்கப்படும் பொழுது அந்த குறிப்பிட்ட தொகையை உடனடியாக கேள்விதாரரை திருக்கோயிலுக்கு செலுத்தச் சொல்ல நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. அத்தொகையை கேள்வி கேட்பவர் உடனேயே செலுத்திய பின்னரே மேற்கொண்டு ஏலம் கோர வேண்டும்.

27. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிமம் முடிந்ததும் கேள்விதாரர் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். தொகை செலுத்தி ரசீது பெற்ற பின்னரே அடுத்த இனம் ஏலம் விடப்படும். வங்கிக்குச் செல்ல வேண்டும். இன்னும் ஒரு மணி நேரம் அவகாசம் வேண்டும் என்ற கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

28. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் உயர்ந்த கேள்விதாரர் பணம் செலுத்தத்தவறினால் அவரது கேள்வியை ரத்து செய்யப்பட்டு அவரது பணம் பறிமுதல் செய்யப்பட்டு அடுத்த உயர்ந்த கேள்விதாரருக்கு உரிமம் உறுதி செய்யப்படும்.

29. உரிமதாரர் அவரவர்க்கு விடுக்கப்பட்ட உரிமம் தவிர வேறு உரிமங்களில் தலையிடுவதற்கு உரிமை இல்லை. ஏல நிபந்தனைகள் தொடர்பாக எழும் சந்தேகங்களுக்கு உதவி ஆணையர்/செயல் அலுவலர் விளக்கமே உறுதியானது. அதனை எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஏல நிபந்தனைகளை மாற்றவோ அல்லது புதிய நிபந்தனைகளை சேர்க்கவோ உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

30. இத்திருக்கோயிலின் திருப்பணிகள், திருக்கோயில் மராமத்துப் பணிகள் ஆகியவை நடைபெறும் பொழுது, தற்போது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிமம் எடுத்தவர்கள் திருக்கோயில் மாற்று ஏற்பாடு செய்யும் இடத்தில் வியாபாரம் செய்யவும், பணிகள் முடிந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் திரும்பச் சென்று வியாபாரம் செய்யவும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

31. உரிமம் பெற்ற நபர்கள் எக்காரணத்தைக் கொண்டும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த கூடாது அதற்கு பதிலாக காகிதப் பை, துணிப்பை, பாக்குமட்டை மற்றும் மூங்கில் கூடைகள் போன்ற பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

32. உரிமம் பெற்ற நபர்கள் தான் பயன்படுத்தும் இடத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். திருக்கோயில் தூய்மைக்கு கேடு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டால் உரிமம் ரத்து செய்யப்படும்.

33. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ந.க.எண்.765/2017/இசட் 1/ நாள்17.03.2017–ன் குறிப்பில் அறிவுறுத்தப்பட்ட ஆலோசனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் பின்பற்ற வேண்டும்.

34. ஏலக் கேள்வி நிறுத்தப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடத்தப்படும்.

36. பொதுஏலத்தில்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் தங்களது ஆதார், பான் கார்டு மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் வழங்க வேண்டும்.

## <u>வருடாந்திர இனங்கள் சிறப்பு நிபந்தனைகள்</u>

### <u>இனம் – 1 ஆற்றுமேடை விநாயகர் மற்றும் நாகர்கோயில் பூஜை பாத்தியதை உரிமம்</u>

1. ஆற்றுமேடை விநாயகர், நாகர் மூர்த்திகளை தரிசிக்க வரும் பக்தர்களிடம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு கட்டணம் வசூலிக்க வேண்டும்.

2. நாகர்கோயில் கொட்டகை மற்றும் நாகர், விநாயகர் வகையறா மூர்த்திகளை பாதகம் ஏதும் ஏற்படாதபடி ஏலதாரர் பாதுகாத்து வந்து ஏல கெடு முடிவு காலத்தில் திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க கடமைப்பட்டவராவர். மேற்படி சிலைகள் காணாமல் போனால் உரிமதாரரே முழு பொறுப்பு ஆவார்

3. மேற்படி மூர்த்திகளுக்கு அபிஷேகம் வகையறா செய்வித்தும், தீபம் வகையறா வைத்தும் சேவார்த்திகள் போற்றும்படி வைத்திருக்க வேண்டியது. மேடை, மண்டபம் வகையறா இடங்களை தண்ணீர் விட்டு கழுவியும் நதிப்படித்துறை மண்டபம் வகையறாக்களை பிரதி தினமும் பெருக்கி சுத்தமாக வைக்க வேண்டும்.

4. ஆற்று விநாயகர் நாகர் கோயிலில் போடப்பட்டிருக்கின்ற மின்சார விளக்குகளுக்கு இந்த உரிமதாரர் மின்சாரக் கட்டணம் வகையறா கட்டிக் கொள்ள வேண்டியது.

5. மேற்படி கோயிலில் உள்ள மின்சார மீட்டர் வகையறா சாமான்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான அனைத்து பொருட்களையும் திருட்டு போகாமல் பாதுகாத்து வர வேண்டியது. மின்சாரசாதனங்கள் பழுதுபட்டாலும் களவு போனாலும் உரிமதாரரே தம் சொந்த செலவில் ஈடு செய்யக் கடமைப்பட்டவராவார்.

6. மின்சார விளக்கு சம்பந்தப்பட்ட வகையில் இந்த உரிமதாரர் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டியது. ஏதாவது குற்றம் குறை அல்லது தகராறு ஏற்பட்டால் அதற்கு இந்த ஏலதாரரே பொறுப்பாக கடமைப்பட்டவராவார்.

7. எக்காரணத்தைக் கொண்டும் உண்டியல் வைத்து வசூல் செய்யக்கூடாது. உண்டியல் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக உரிமத்தை ரத்து செய்யப்பட்டு, தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடத்தப்படும்.

8. திருக்கோயிலில் கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| | வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் விபரம் | | ரூ. பை |
|---|---|---|---|
| 1. | அபிஷேகம் செய்ய அபிஷேகம் 1–க்கு | –– | 2.50 |
| 2. | காதுகுத்து 1–க்கு | –– | 1.00 |
| 3. | நைவேத்தியம் வகை 1–க்கு | –– | 0.50 |
| 4. | அர்ச்சனை 1–க்கு | –– | 0.50 |
| 5. | மேடை மண்டபம் இவைகளில் தர்ப்பணம் கருமாதி செய்ய 1–க்கு | –– | 1.00 |

மேற்காணும் விபரங்களின் கட்டண விபரத்தை தன்சொந்த செலவில் உரிமதாரர் போர்டு எழுதி பொதுமக்கள் பார்வைக்கு படும் வகையில் வைக்க வேண்டும்.

10. திருக்கோயில் நிர்வாகத்தின் அனுமதியின்றி எவ்வித தனியார் விளம்பர பலகைகளை கோயில் வளாகத்தில் வைத்தல் கூடாது.

**இனம் –2 அருள்மிகு பட்டிவிநாயகர் சன்னதியில் விடலைத் தேங்காய்களை சேரித்துக் கொள்ளும் உரிமம்**

1. தேங்காய்கள் உடைக்கப்பட்ட இடத்தில் ஈ மொய்க்காமல் கழுவி சுத்தமாக பராமரிக்க வேண்டும்.
2. சிதறு தேங்காய்களை உடனுக்குடன் எடுத்து செல்ல வேண்டும்.

**இனம் – 3 திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருக்கோயில் வளாகத்தில் உள்ள தென்னை மரங்களில் தேங்காய் பறித்துக் கொள்ளும் உரிமம்**

1. தென்னை மரத்திலுள்ள நீராடும் முற்றிய தேங்காய்களை மட்டுமே திருக்கோயில் அதிகாரிகள் முன்னிலையில் பறித்துக் கொள்ள வேண்டும்.
2. பச்சை மட்டையை வெட்டக்கூடாது.
3. திருவிழாவில் போடப்படும் முகப்புப் பந்தலுக்கு கீற்றுகள் கட்ட பச்சைமட்டைகள் வெட்டிக் கொடுக்க வேண்டும்.
4. பொதுஏலத்தில் வருடம் ஒன்றுக்கு இன்ன தொகை என ஏலம் கோர வேண்டும்.
6. ஏலம் உறுதி செய்யப்பட்ட நபர் ஏலத்தொகை முழுவதையும் உடனே செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.
7. தென்னை மரங்களில் காய்ப்பு நல்ல முறையில் கிடைக்கத்தக்க உர வகைகளைப் போட்டும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு மரங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.

**இனம் – 4 திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆற்றுவிநாயகர் நாகர் கோயில் பூஜை பாத்தியதை இடத்தில் உள்ள தற்காலிக கடை அமைத்து பூஜை சாமான்கள் வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம் வருடக்குத்தகை**

1. திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கித் தரும் இடத்தில் 10' x 6' என்ற அளவில் மட்டும் தனது சொந்த செலவில் எளிதில் தீ பிடிக்காத வகையில் அடிப்பகுதி இரும்பு கிராதி அல்லது இரும்பு பைப் நட்டும், மேற்கூரை தகர சீட்டு அல்லது தெரகோட்ட சீட்டில் தற்காலிக செட் அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. வருடம் 1–க்கு என ஏலம் கோர வேண்டும் / டெண்டர் கொடுக்க வேண்டும்.
3. திருவிழாக் காலங்களில் மற்றும் திருப்பணி வேலைகளுக்கு மேற்படி இடம் தேவைப்பட்டால், அதற்கு ஏற்ப தற்காலிக கடையினை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. தமிழ்நாடு, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினராலும், அரசாங்கத்தாலும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சுகாதாரத்திற்கு ஊறுவிளைக்கும் பொருட்கள் மற்றும் திருக்கோயிலில் ஏற்கனவே பொதுஏலம்/டெண்டர் எடுத்துள்ள ஏலதாரர் வைத்து வியாபாரம் செய்து வரும் பொருட்களை வைத்து வியாபாரம் செய்தல் கூடாது. மீறினால் ஏல உரிமம் ரத்து செய்யப்பட நேரிடும்.
5. மேற்படி பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும், பக்தர்களின் புகார்களுக்கு இடம் அளிக்காவண்ணம் இருக்க வேண்டும். மேலும் பக்தர்கள் அறியும் வண்ணம் விலைப்பட்டியல் வைக்க வேண்டும்.

**இனம் – 5 இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்காணும் நன்செய் நிலத்தில் ஓராண்டிற்கு மட்டும் விவசாய சாகுபடி செய்து கொள்ளும் உரிமம் வருடக்குத்தகை சர்வே எண். 37/3–ல் 0.08.0 ஹெக், 39/2–ல் 0.17.0 ஹெக், 39/3–ல் 0.19.0 ஹெக், 39/4–ல் 0.17.0 ஹெக், 39/5–ல் 0.18.0 ஹெக், 39/6–ல் 0.17.0 ஹெக், 39/7–ல் 0.17.0 ஹெக்டேர் ஆக கூடுதல் 1.13.0 ஹெக்டேர் நிலங்கள் வருடக்குத்தகை**

1. மேற்காணும் நிலங்களுக்கு குத்தகை உரிமம் 12.07.2022 முதல் 30.06.2023 வரை மட்டும் ஆகும்.
2. காலம் முடிவுற்றதும் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலமாகும்
3. ஏலம் டெண்டர் உறுதி செய்யப்பட்டவர்கள் திருக்கோயில் பதிவேட்டில் புகைப்படம் ஒன்றை ஒட்ட வேண்டும் மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட வேண்டும்.
4. ஏலகாலம் முடிந்தவுடன் திருக்கோயிலுக்கு நிலத்தினை ஒப்படைக்க வேண்டும்.
5. திருக்கோயில் நிலத்தில் சாகுபடி உரிமம் மட்டுமே உண்டு.
6. திருக்கோயில் நிலத்திலுள்ள மரங்கள் மற்றும் இதர அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு எவ்வித சேதாரமும், வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது.
7. திருக்கோயில் நிலத்தில் மின்சாரம், போர்வெல் மற்றும் தண்ணீர் ஆதாரங்கள் இல்லை என்பதால், அதில் உரிய ஏற்பாடுகளை உரிமதாரரே நிர்வாகத்தின் அனுமதி பெற்று செய்து கொள்ள வேண்டும்.
8. திருக்கோயில் நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்குட்பட்டு நடந்து கொள்ள வேண்டும். தவறினால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.
9. குத்தகை உரிமம் பெற்றவர், நிலம் தொடர்பான வில்லங்க விவகாரங்களில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏலம்/டெண்டர் உரிமம் ரத்து செய்யப்படும்.
10. திருக்கோயில் நிர்வாகம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அவர்கள் அவ்வப்போது அறிவிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

## மாதாந்திர உரிம இனங்கள் சிறப்பு நிபந்தனைகள்

**இனம் – 5 திருக்கோயில் ஒதுக்கித் தரும் இடத்தில் தற்காலிக தகரசெட் அமைத்து ஸ்படிகமாலை கடை**

1. திருக்கோயிலுக்கு வெளியே ஒதுக்கித் தரும் இடத்தில் 8’x8’ என்ற அளவில் சொந்த செலவில் தற்காலிக கடை அமைத்துக் கொண்டு ஏலகாலம் முடிந்தவுடன் சொந்த செலவில் அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. படிகலிங்கம் துளசி மாலை சுவாமி திருவுருவப்படம், சுவாமி டாலர், சுவாமி கீசெயின் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.
3. மின்கட்டணம், சப்மீட்டர் அமைத்துக் கணக்கிடப்படும்.
4. ஆகம விதிகளுக்குட்பட்ட இனங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.
5. இந்த இனம் வாடகை மாதம் 1–க்கு என ஏலம் கோர வேண்டும்/ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அரசு விடுமுறை அல்லாத நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

திருமதி. செ.வ.ஹர்சினி,பி.எஸ்.சி,பி.எல்.,
தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
மருதமலை

திருமதி. கா.விமலா, எம்.ஏ,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
Website: hrce.tn.gov . in
Email : aceocbe_9760.hrce@tn.gov.in
தொலைபேசி எண் : 0422–2607991

இடம் : பேரூர்
நாள் : 01.06.2022